بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

"நானும் என்னுடைய அமரர்களும் மாநபியின்மீது சலவாத்துச் சொல்கிறோம். விசுவாசிகளே, நீங்களும் அந்த நபியின்மீது சலவாத்தும் சலாமும் சொல்லுங்கள்"

-இறைமொழி-

# மாண்புடன் சொல்வோம் மாநபீ சலவாத்து!!

# சலவாத்து மாலை


எழுதியவன் :

மௌலவீ MJA.ஸீஹ்ரீ [றப்பானீ]

காத்தான்குடி


2017.09.06



## சமர்ப்பணம்

இச்சிறப்புமிகு சலவாத்து மாலையாகிறது இம் மாலையின் நடுமுத்தாகிய, இந் நூலின் கருவாகிய எம் உயிரிலும் மேலான கண்மணி நாயகம் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள்மீதும், அன்னவர்களின் பரிசுத்த குடும்பத்தார்கள், அன்னவர்களின் சங்கைமிக்க தோழர்கள், அன்னவர்களின் வாழ்க்கைச் சுவடுகளை அனுதினமும் பின்பற்றி வாழ்ந்த நல்லோர்களான இறைநபீ நேசர்கள் மீதும் சமர்ப்பணமாகும்.

தொகுத்தோன்

2017.09.06

# என்னுரை

أللهم صل وسلم على رسولك سيدنا وحبيبنا ومولانا محمد صلى الله عليه وسلم عدد في علم الله صلاة

دائمة بدوام ملك الله وعلى آله الطيبين وعلى صحابته المكرمين وعلى من سار في سيره الدائمين أما بعد

“நானென்ற ஒன்றில்லை நாயனாகிய இறைவனே எங்கும் இருக்கின்றான்” என்ற இறை கலிமாவின் ஆன்மீக தத்துவத்தை இவ்வுலகில் பறைசாற்றி எம்மை யெல்லால் இறைவிசுவாசிகள் என்ற உயர் பட்டியலில் சேர்த்து வைத்த கண்மணியான நாயகம், எம்மை மனிதப் புனிதர்களாக ஆக்கிய தாயகம் முஹம்மது முஸ்தபா (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின் புனிதமிகு சலவாத்து மாலையை இயற்றி அன்னவர்களின் புகழைப் பாடச் செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்தை என் உள்மனதில் விளையச் செய்த ஏகனான அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழ்ச்சிகளும். அல்ஹம்துலில்லாஹ்!

பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின்மீது புகழ்பாடுவது “ஹறாம்” என்ற பாணியில் படம் பிடித்துக் காட்டக்கூடிய குருடர்களுக்கு மத்தியில் அதிகமான மக்கள் வாழ்ந்து கொண்டிருப்பதால் சிலர் சலவாத்து என்பது மறைந்து விட்டது, அழிந்து விட்டது என்று நினைக்கின்றனர். விடயம் அவ்வாறல்ல!

இவ்வுலகில் வாழக்கூடிய மக்களெல்லாம் ஒன்று சேர்ந்து சூரியனின் ஒளியை மறைக்க நாடினாலும் அது இயலாத காரியம் என்பதுபோல பெருமானாரின் சலவாத்தை யார் மறைத்தாலும்





மறந்தாலும் அது மறையாத, மறைக்கப்படாத வெள்ளிடை மழையாகும். ஏனெனில் சலவாத்து என்பது இறைவன் தனது கடமையாக எடுத்துக் கொண்ட செயலாகும். விடயம் இவ்வாறிருக்க எங்ஙனம் சலவாத்து என்பது அழிந்து போகும்? ஒருபோதும் அழியாது! அதை மறந்தவனும் மறைத்தவனுமே அழிவான் என்பதும், அதை மறக்காதவனும் மறைக்காதவனும் ஒருபோதும் அழியாதவன் என்பதும் சத்தியமாகும்!

சலவாத்துச் சொல்வது என்பது ஓர் சாமானியமான விடயமல்ல. அதற்கு நன்மை எல்லையில்லாச் சமுத்திரமாகும். அதை கணக்கிட முடியாத தாரகைகளாகும்.

பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின் புகழை யாராலும் மட்டிட முடியாது. அதை பாடல்களாக வடித்து விடவும் முடியாது. இருந்தாலும் அன்னவர்களின் புகழைப் பாடி என் பாவக்கறையைப் போக்க வேண்டும் என்பதற்காக என் பேனா முனையை நட்டினேன். என் காவியக் கலையைத் தொடங்கினேன். என்னுரைக்கு முத்திரையிட்டேன்.

**தொகுத்தோன்**

# சலவாத்து மாலை

**கவி :**

**அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்க யாறஸூலல்லாஹ்**
**அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்க யாஹபீபல்லாஹ்**

**01.** எல்லாம் அவனாய் இருக்கும் எந்தன் இறையை நானும் போற்றுகிறேன்.
எந்தன் புகழை ஏற்றே அவனும் அருளும் சொரிய வேண்டுகிறேன்

**02.** ஏதும் குறைகள் இருந்தால் அதனை மன்னித் தருளக் கேட்குகிறேன்.
ஏந்தல் நபியின் பொருட்டால் எந்தன் கவியை நானும் தொடங்குகிறேன்.

**03.** திங்கள் நபியின் நாமம் கொண்டே பேனா முனையை நட்டுகிறேன்.
திவ்விய நாதர் குடும்பம் தோழர் பொருத்தம் கவியில் நாடுகிறேன்.

**04.** தீனுக்குயிரும் ஊட்டிய எங்கள் தாஹா முகமும் நோக்குகிறேன்.
தீபம் ஏற்றித் தேரில் ஏற்றிக் கவிநயம் கொண்டு வாழ்த்துகிறேன்.

**05.** எந்தன் மணியே உள்ளக் கனியே தாங்கள் எந்தன் காவியரே!
எந்தன் உடலும் சேர்ந்தே உயிரும் என்றும் உமக்கே அர்ப்பணமே!





**06.** அழகின் அழகே வடிவின் வடிவே நீரே எங்கள் காதலரே!
அறிவின் அமுதே கருவின் கருவே நீரே எங்கள் பாவலரே!

**07.** மலரின் மணமே மதியின் அழகே மாறாதென்றும் உம் புகழே!
மண்ணோர் அருளே விண்ணோர் புகழே எல்லை இல்லாப் பெருங் கடலே!

**08.** அறிவில் அர்ஷே பணிவில் குர்ஸே நீரே கவியின் தாரகையே!
துணிவில் கதிரே மறையின் ஒளிவே நீரே இறையின் தீன் முரசே!

**09.** உங்கள் முகத்தின் ஒளிவைக் கண்டால் மதியும் வெட்கித் தவித்திடுமே!
உங்கள் கொடையின் வாசல் கண்டால் காற்றும் அக்கனம் நின்றிடுமே!

**10.** உங்கள் கரத்தைப் பிடித்தோர் என்றும் இறையோன் கரத்தைப் பிடித்தவரே!
உங்கள் கருத்தை ஏற்றோர் என்றும் இறையோன் பொருத்தம் பெற்றவரே!

**11.** உங்கள் பார்வை பட்டால் போதும் கல்லும் கரைந்தே ஓடிடுமே!
உங்கள் உள்ளம் குளிர்ந்தால் போதும் எங்கள் கறைகள் நீங்கிடுமே!

**12.** உங்கள் அழகைக் காணும் கண்கள் லெட்சம் கோடி தாண்டிடுமே!

உங்கள் வதனம் காணா கண்கள் இருந்தும்
பலனை இழந்திடுமே!

13. உங்கள் அறிவுப் புலமை முன்னால் ஏனை
அறிவுகள் சொற்பணமே!
உங்கள் ஞானத் திடலின் முன்னால் எங்கள்
அறிவுகள் சிறு துளியே!

14. பணிவின் உருவே பாசக் கடலே தங்கள்
வாழ்வே சோபனமே!
பதியின் ஒளிவே பாலின் குணமே நீங்கள் தானே
எம் உயிரே!

15. தங்கப் பதியே திங்கள் நிலவே உங்கள்
வாழ்வே இறை வழியே!
தங்கள் வழியில் நடந்தால்தானே என்றும்
எமக்கு சொற்பதியே!

16. 'ஏகன் இறைவன்' தௌஹீத் ஞானம் உலகில்
பரப்பிட வந்தவரே!
எங்கள் கல்பின் கறையை நீக்கி இறைவன்
சமூகம் சேர்த்தவரே!

17. மதினா ஆளும் மன்னர் நபியே தங்கள் புகழே
உயர்ந்ததுவே!
அர்ஷும் குர்ஸும் லவ்ஹும் கலமும் உங்கள்
முன்னால் பணிந்தனவே!

18. இறைவன் அழைப்பில் நீரும் சென்றீர் அவனைக்
கண்டே மீண்டவரே!
ஏனை நபிமார் அவனைக் கண்டார் அவனின்
முன்னால் வீழ்ந்தனரே!





19. உங்கள் பாதம் அர்ஷின் மேலே வேறோர்
யாரும் பதித்திலரே!
நீங்கள் சென்றீர் உயந்தே சென்றீர்
உம்புகழென்றும் உயர்ந்ததுவே!

20. உங்கள் அருளால் விரலின் இடையில் நீரும்
ஊற்றாய் மாறியதே!
தோழர் அதிகம் இருந்தும்கூட அவரின் தாகம்
தீர்ந்தனரே!

21. அருளாம் உங்கள் கையின் அசைவில் மதியும்
இரண்டாய் பிளந்ததுவே!
அற்புதம் அற்புதம் உங்கள் வாழ்வோ என்றும்
என்றும் அற்புதமே!

22. மன்னர் நபியே உங்கள் கையில் கல்லும்
தஸ்பீஹ் செய்ததுவே!
மரங்கள் உங்கள் அழைப்பைக் கேட்டு
பணிவாய் உம்மிடம் வந்தனவே!

23. உங்கள் அழைப்பைக் கேட்டால் போதும்
பிணமும் எழுந்தே நின்றிடுமே!
உங்கள் இமையை இசைத்தால் போதும்
காற்றும் ஒருகனம் நின்றிடுமே!

24. மக்கத்து ரோஜா மதீனத்து ராஜா மானுக்கு
பிணை நின்ற காவலரே!
சல்மான் பாரிஸ் தோழர் கடனை தீர்த்தே
அவரை மீட்டவரே!

25. அழகர் யூசுப் வதனம் கண்டே தோழிகள்
கரத்தை அறுத்தனரே!

உங்கள் அழகைக் கண்டால் போதும் மரணம் அவர்க்கு நிச்சயமே!

26. அடடா அடடா உங்கள் அழகு யாரும் காணாப் பேரழகே!
அதுதான் அழகு என்றும் அழகு அதுதான் என்றும் தனியழகே!

27. யுத்தம் செய்தே தோழர் வந்தால் அவரின் பிணிகள் தீர்த்தவரே!
உங்கள் கரத்தின் அற்புதம் அற்புதம் அதுவோ இறைவன் அற்புதமே!

28. உங்கள் உமிழ்நீர் அருளால் உங்கள் தோழர் கண்ணும் மிளிர்ந்ததுவே!
உங்கள் கைகள் பட்டதும் உடனே ஒட்டகம் எழுந்து நடந்ததுவே!

29. உங்கள் பாதம் மலையைத் தொட்டால் அதுவும் சின்னம் தாங்கிடுமே!
மணலில் தடமும் காணார் என்றும் இதுவே இறைவன் தத்துவமே!

30. உங்கள் பாதம் பட்டால் போதும் மண்ணும் பொன்னாய் மாறிடுமே!
உங்கள் பார்வை பட்டால் போதும் பஞ்சம் பஞ்சாய் பறந்திடுமே!

31. உங்கள் விரலின் ஆட்டம் கண்டால் நரகம் தன் கண் மூடிடுமே!
உங்கள் உள்ளம் நினைத்தால் போதும் சொர்க்கம் தன்முன் நின்றிடுமே!





32. உங்கள் பெயரைச் சொன்னால் போதும் எந்தன் உள்ளம் பூத்திடுமே!
உங்கள் நினைவில் அழிந்தால் போதும் அதுவே சொர்க்கம் ஆகிடுமே!

33. எந்தன் எழுத்தும் எந்தன் கவியும் உம்மில் ஆசை கொண்டனவே!
எந்தன் கண்ணின் முன்னே நின்று ‘என்னை எடுடா’ என்றனவே!

34. தென்றல் காற்றும் தூவும் மழையும் என்னை வாழ்த்திச் சென்றனவே!
உங்கள் புகழைக் கவியில் சொல்லப் பேனா நட்டிய காரணமே!

35. எந்தன் தூக்கம் எந்தன் சோம்பல் எந்தன் கண்ணைத் தொட்டனவே!
ஏந்தல் நபியே உங்கள் காதல் என்னைத் தட்டி எழுப்பியதே!

36. எந்தன் கனவும் எந்தன் நினைவும் உம்மைக் காணத் துடிக்கிறதே!
எந்தன் கண்கள் திறந்தால் போதும் அழுகை மழையாய் பொழிகிறதே!

37. உம்மைக் காணத் துடிக்கும் எந்தன் உள்ளக் குமுறல் கேட்பீரோ?
உம்மைக் காணத் துடிக்கும் எந்தன் கண்ணின் வலியைத் தீர்ப்பீரோ?

38. எந்தன் மரணப் படுக்கை முன்னால் உம்மை நானும் காண்பேனோ?

அழகைக் கண்டே அருளும் பெற்றே எந்தன் உயிரும் துறப்பேனோ?

39. உங்கள் நாமம் எந்தன் நாவில் என்றும் மொழியச் செய்வீரோ?
எந்தன் இறுதிப் பேச்சாய் உங்கள் நாமம் உதிரச் செய்வீரோ?

40 எந்தன் மரணத் தொழுகை வந்தால் நீங்கள் நின்றுத் தொழுவீரோ?
எந்தன் கப்றின் இருளை நீக்கி தங்கள் ஒளியும் தருவீரோ?

41. கப்றில் நெருக்கம் இல்லாமல்யென் மத்ஹைக் கொண்டு காப்பீரோ?
முன்கர் கேட்கும் கேள்விக் கென்னை பதிலும் பகரச் செய்வீரோ?

42 உங்கள் வதனம் காட்டும் நேரம் எந்தன் குருட்டை தீர்ப்பீரோ?
'யாறஸூலல்லாஹி' என்று திருவாய் மொழியச் செய்வீரோ?

43. உங்கள் மத்ஹைப் பாடிக் கொண்டே கப்றில் நானும் துயில்வேனோ?
உங்கள் கவியைப் பாடிக் கொண்டே கப்றை நானும் துறப்பேனோ?

44. துக்கம் துயரம் கவலை யெல்லாம் ஆளும் மஹ்ஷர் வேளையிலே...
துயர்ந்தே உங்கள் கொடியின் நிழலில் நானும் இன்பம் கொள்வேனோ?





45. தாகம் தீர்க்கும் தாஹா நபியே எந்தன் தாகம் தீர்ப்பீரோ?
தங்கள் கரத்தைப் பிடித்துக் கொண்டே இறையோன் பாலம் கடப்பேனோ?

46. எந்தன் பாவச் சுமைகள்ளதிகம் இடதில் உண்டு மாநபியே!
என்னில் கருணை செய்தே எந்தன் ஏட்டை வலதில் தருவீரோ?

47. உங்கள் புகழைப் பாடிக் கொள்வேன் என்னை சொர்க்கம் சேர்ப்பீரோ?
உங்கள் குரலின் இனிமை கேட்டுக் கொண்டே காலில் கிடப்பேனோ?

48. காணும் கோலம் யாவில் என்றும் கருவின் தோற்றம் காண்பேனோ?
ஹக்கை கல்கில் ஹக்காய் என்றும் கண்டே நானும் அழிவேனோ?

49. உம்மைக் காணும் வரமும் வேண்டும் இதுவே எந்தன் வேண்டுதலே!
ஆசை கொண்டேன் பாசம் கொள்வீர் கண்ணீர் துடைப்பீ ரென்னுயிரே!

50. உங்கள் புகழைக் கவியில் சொன்னேன் உம் புகழ் ஞானப் பெருங்கடலே!
உங்கள் புகழைச் சொன்னோர் என்றும் கரையே தாண்டார் சத்தியமே!!

கவி :

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மத்
யாறப்பி ஸல்லி அலைஹி வஸல்லிம்

001. ஏகனின் திருப்பெயரைக் கொண்டுயென்
நபீமாலை துவங்குகிறேன் முஹம்மத்.

002. எந்த காரியத்தின் ஆரம்பம்
இறைபெயர் இல்லையென்றால் முஹம்மத்.

003. அந்த காரியத்தில் "பறகத்"
குறைவாக இருக்குமென்றார் முஹம்மத்.

004. பிஸ்மியைச் சொன்னவனை மலைகள்
தஸ்பீஹுு செய்யுமென்றார் முஹம்மத்.

005. பிஸ்மியைச் சொன்னவனை இறைவன்
சொர்க்கத்தில் புகுத்திவிட்டான் முஹம்மத்.

006. அல்ஹம்துலில்லாஹி என்று யென்
இறையோனைப் புகழுகிறேன் முஹம்மத்.

007. அல்ஹம்து இல்லாத காரியம்
பறகத்து குறைந்த தென்றார் முஹம்மத்.

008. அல்ஹம்துலில்லாஹி என்பதில்
எட்டு எழுத்துக்களாம் முஹம்மத்.

009. சொர்க்கத்தின் வாயல்களாம் எட்டும்
அவனுக்குத் திறக்குமென்றார் முஹம்மத்.





010. அல்ஹம்துலில்லாஹி சொன்னவன்
நேர்வழி காண்பானென்றார் முஹம்மத்.

011. நன்நபீ பேரில் என் சலவாத்தை
ஸலாமுடன் சொல்லுகிறேன் முஹம்மத்.

012. நானும் என்னுடைய அமரரும்
சலவாத்து சொல்வோமென்றான் முஹம்மத்.

013. நீங்களும் நன்நபியின் பேரில்
சலவாத்து சொல்லுமென்றான் முஹம்மத்.

014. அல்லாஹுும்ம ஸல்லி அலா முஹம்மத்
என்றதைச் சொல்லிடுவோம் முஹம்மத்.

015. சலவாத்தைச் சொன்னவனில் மலக்குகள்
சலவாத்துச் சொல்வாரென்றான் முஹம்மத்.

016. சொர்க்கத்தைக் கண்டிடுவான் மரணத்தில்
சலவாத்துச் சொன்னவனாம் முஹம்மத்.

017. நரகத்தில் நுழைந்திடுவான் சலவாத்தை
சொல்லாத பாவியென்றான் முஹம்மத்.

018. நைனாரைக் கண்டிடுவான் சலவாத்தை
நலமுடன் சொன்னவனாம் முஹம்மத்.

019. சலவாத்தைச் சொல்லாதவன் காணாக்
குருடனாய் மாய்ந்திடுவான் முஹம்மத்.

020. தங்களின் குடும்பத்தினை நானும்
மறந்திடாப் பாவியிவன் முஹம்மத்.

**021.** உவப்புடன் சொல்லிடுவோம் சலவாத்தை
பரிசுத்த குடும்பத்துக்காம் முஹம்மத்.

**022.** நேர்வழி பெற்றோராம் தோழர்க்கும்
நேர்த்தியாய்ச் சொல்லிடுவோம் முஹம்மத்.

**023.** தொடர்ந்தவர் துயர்ந்தவர்கள் அனைவர்க்கும்
தொடராகச் சொல்லிடுவோம் முஹம்மத்.

**024.** இறைகண்ட நேசர்களாம் வலீமார்க்கும்
இணக்கமாய்ச் சொல்லிடுவோம் முஹம்மத்.

**025.** நபீபுகழ் பாடுவோர்கள் அனைவர்க்கும்
நலமுடன் சொல்லிடுவோம் முஹம்மத்.

**026.** கர்த்தனைக் காட்டித்தரும் குருமார்க்கும்
கனிவுடன் சொல்லிடுவோம் முஹம்மத்.

**027.** கல்வியைக் கற்றுத் தரும் ஆசான்க்கும்
கவியுடன் சொல்லிடுவோம் முஹம்மத்.

**028.** கருவினில் சுமந்த எம் பெற்றோர்க்கும்
களிப்புடன் சொல்லிடுவோம் முஹம்மத்.

**029.** இப்பாரில் முஃமீனாய் வாழ்வோர்க்கும்
இசைவோடு சொல்லிடுவோம் முஹம்மத்.

**030.** இறைவன்தன் நபிக்களித்த சிறப்பினை
இயல்புடன் சொல்லிடுவேன் முஹம்மத்.

**031.** இயன்றதைச் சொல்லிடுவேன் நானும்
இறையாசி வேண்டுகிறேன் முஹம்மத்.





**032.** ஏதும் தவறுகள் இங்கிருந்தால்
ஏகனே பொறுத்திடுவாய் முஹம்மத்.

**033.** நம்நபீ சிறப்புக்களைச் சொல்லிட
நாம் இங்கு தகுதியில்லை முஹம்மத்.

**034.** இருந்தாலும் உம்புகழைக் கூறிட
இப்பாவில் நாடுகிறேன் முஹம்மத்.

**035.** தமக்கென்று இறையளித்த சிறப்புக்கள்
சொல்லொன்னா பொக்கிஷமாம் முஹம்மத்.

**036.** மண்ணை அளந்திடினும் உம்மை
புகழ்ந்திட முடியாது முஹம்மத்.

**037.** உம்புகழ் பாடிட எம் நாக்கள்
என்றும் தகுதியில்லை முஹம்மத்.

**038.** உம்புகழ் பாடியவர் அனைவரும்
முடிந்ததைச் சொன்னவர்தான் முஹம்மத்.

**039.** உங்களின் தத்துவங்கள் அனைத்தும்
இறையோனின் தத்துவமாம் முஹம்மத்.

**040.** உங்களின் தத்துவங்கள் ஏட்டிலில்லை
இறையோனின் பொக்கிஷமாம் முஹம்மத்.

**041.** பொக்கிஷமாய் இருந்த உங்களை
வெளியாக்க ஆசை கொண்டான் முஹம்மத்.

**042.** பலகோடி நூறு காலம் உங்களை
அழைத்திட எண்ணம் கொண்டான் முஹம்மத்.

**043**. “குன்” எனும் சொல்லாலே தங்களை
வெளியாக்கி வைத்தவனாம் முஹம்மத்.

**044**. அக்காலம் நடந்தவற்றை இறைவன்
மாத்திரம் அறிபவனாம் முஹம்மத்.

**045**. தங்களின் ஒளிப்பிளம்பை அவனும்
கட்டி அணைத்தவனாம் முஹம்மத்.

**046**. இறையோனின் உள்ளமதில் இருந்து
முதலொளி ஆனவராம் முஹம்மத்.

**047**. தங்களின் ஒளிமயத்தில் இருந்தே
அனைத்தையும் படைத்தவனாம் முஹம்மத்.

**048**. அர்ஷு குர்ஸுகளும் லவ்ஹு கலம்
சொர்க்கங்கள் நரகங்களும் முஹம்மத்.

**049**. கடல் மலை வானம்முதல் பூமியும்
எல்லாமே படைத்தவனாம் முஹம்மத்.

**050**. தன்னருட் பேருடனே உங்களின்
திருப் பெயர் சேர்த்தவனாம் முஹம்மத்.

**051**. சொர்க்கத்தின் வாயல்களில் உங்களின்
நாமம் பொறித்தவனாம் முஹம்மத்.

**052**. தங்களின் திருவொளியை ஆதமில்
தயவுடன் வைத்தவனாம் முஹம்மத்.

**053**. நுபுவத்தின் முத்திரையாய் உங்களை
அவர் முதுகில் சேர்த்தவனாம் முஹம்மத்.





**054**. அமரர்கள் யாவரையும் ஆதமுக்கு
தலைசாய்க்க வைத்தவனாம் முஹம்மத்.

**055**. தலைசாய்தல் உம்மொளிக்கே அல்லால்
ஆதமுக் கில்லையென்றான் முஹம்மத்.

**056**. உங்களின் சங்கையினைப் பேணாத
இப்லீஸைத் துறத்தி வைத்தான் முஹம்மத்.

**057**. தங்களின் திருப்பெயரை இறையுடன்
ஆதமைக் காண வைத்தான் முஹம்மத்.

**058**. “யாறப்பி மன் ஹாதா” என்றே
இறையிடம் கேட்டவுடன் முஹம்மத்.

**059**. உந்தன் குழந்தைகளில் வருகின்ற
இறுதித் தூதரென்றான் முஹம்மத்.

**060**. இவர்களின் திருப்பெயரை மனனம்செய்
இறுதியில் உதவுமென்றான் முஹம்மத்.

**061**. காலங்கள் உருண்டோடிச் சென்றன
ஆதமின் வாழ்க்கையிலே முஹம்மத்.

**062**. நானென்ற பழத்தினைத் தின்றதினால்
புவிமீது இறக்கி வைத்தான் முஹம்மத்.

**063**. இப்படிச் செய்ததெல்லாம் இறைவனின்
சொல்லொன்னாத் தத்துவமாம் முஹம்மத்.

**064**. தங்களின் சிறப்புக்களை பூமிக்கு
சொல்வதே நோக்கமதாம் முஹம்மத்.

**065**. உங்களின் சிறப்புக்களை பூமியில்
மலக்குகள் சொல்ல வைத்தான் முஹம்மத்.

**066**. இதைக் கேட்ட மரஞ்செடிகள் அனைத்தும்
உமைக் காண நாடியதால் முஹம்மத்.

**067**. அவைகளின் நாட்டங்களைத் தீர்த்திட
இறைசெய்த நாடகமாம் முஹம்மத்.

**068**. புதுமையிலும் புதுமை இவைகள்
கேட்டிட இன்பங்களாம் முஹம்மத்.

**069**. தூபானின் வெள்ளத்திலே நபீநூஹை
ஈடேற்றம் செய்து வைத்தான் முஹம்மத்.

**070**. இப்படிச் செய்ததெல்லாம் காரணம்
உங்களின் முத்திரையாம் முஹம்மத்.

**071**. இப்ராஹீம் நன்நபியைத் தோழராய்
அல்லாஹ் அமைத்துக் கொண்டான் முஹம்மத்.

**072**. தங்களை இறைவன் தன் ஹபீபாய்
அகிலத்தில் ஆக்கி வைத்தான் முஹம்மத்.

**073**. இஸ்மாயீல் நன்நபியை இறைவன்
அறுக்காமல் காத்துக் கொண்டான் முஹம்மத்.

**074**. அறுக்காமல் காத்ததெல்லாம் தங்களின்
நுபுவத்தின் அடிப்படையாம் முஹம்மத்.

**075**. யூசுபு நன்நபியை அழகராய்
அல்லாஹ் அனுப்பி வைத்தான் முஹம்மத்.





**076**. அழகராய்த் திகழ்ந்ததெல்லாம் தங்களின்
ஒளிதந்த முச்சுடராம் முஹம்மத்.

**077**. இம்றானின் நல்மகனார் மூஸாவை
கலீமுல்லாஹ் வாக்கி வைத்தான் முஹம்மத்.

**078**. இறைவனைக் கண்டவுடன் மூஸா
மயங்கி விழுந்தவராம் முஹம்மத்.

**079**. நீங்களும் கண்டீரே இறைவனை
இது பெரும் தத்துவமாம் முஹம்மத்.

**080**. பிர்அவ்னின் சூட்சியிலே இறைவனும்
மூஸாவைக் காத்துக் கொண்டான் முஹம்மத்.

**081**. மூஸாவைக் காத்ததெல்லாம் தங்களின்
அன்பின் கொடையதுவாம் முஹம்மத்.

**082**. இன்ஜீலைப் பரிசலித்தே ஈஸாவை
அகிலம் அனுப்பி வைத்தான் முஹம்மத்.

**083**. வேதங்கள் அடங்களிலும் தங்களின்
புகழ்கள் மிகுந்தவையாம் முஹம்மத்.

**084**. தௌறாத் ஸபூர் இன்ஜீல் அனைத்தும்
உமக்காக வந்தவையாம் முஹம்மத்.

**085**. அகிலத்திற் கருட்கொடையாய் தங்களை
இறைவன் அனுப்பி வைத்தான் முஹம்மத்.

**086**. ‘உங்களைப் போன்றில்லை நான்’ என்ற
சொல்லுக்கு ஒத்தவராம் முஹம்மத்.

**087.** எல்லா விடயத்திலும் எங்களைப்
போன்றில்லை எம் நபியாம் முஹம்மத்.

**088.** தாயின் கருவறையில் இருக்கையில்
சுபச் செய்தி பெற்றவராம் முஹம்மத்.

**089.** ஆரம்ப மாதத்திலே ஆதம் நபீ
ஆசிகள் சொன்னவராம் முஹம்மத்.

**090.** றஸூல்மாரின் தலைவரை நீர் சுமக்கிறீர்
என்றாசி சொன்னவராம் முஹம்மத்.

**091.** இரண்டாம் மாதத்திலே ஷீது நபீ
தோன்றியே வாழ்த்துச் சொன்னார் முஹம்மத்.

**092.** முன்னோரின் பின்னோரின் தலைவரை
சுமக்கிறீர் என்றே சொன்னார் முஹம்மத்.

**093.** மூன்றாம் மாதத்திலே எங்கள்
நூஹ் நபீ தோன்றினராம் முஹம்மத்.

**094.** சங்கையைத் தன்வசமே ஆக்கிக் கொண்ட
நபியினைச் சுமக்கிறென்றார் முஹம்மத்.

**095.** நான்காம் மாதத்திலே இத்ரீஸ் நபீ
சோபனம் சொல்லிச் சென்றார் முஹம்மத்.

**096.** சிறப்புக்கள் பொருந்திய நல் நபியை
சிறப்பாகச் சுமக்கிறென்றார் முஹம்மத்.

**097.** ஐந்தாம் மாதத்திலே ஹூது நபீ
வந்தனம் சொல்லிச் சென்றார் முஹம்மத்.





**098.** மனிதருள் மாணிக்கமாம் தலைவரை
மகிழ்வுடன் சுமக்கிறென்றார் முஹம்மத்.

**099.** ஆறாம் மாதத்திலே இறைத் தோழர்
சோபனம் செப்பிச் சென்றார் முஹம்மத்.

**100.** ஹாஷிம் கிளைக்குரிய நபியை
கனிவுடன் சுமக்கிறென்றார் முஹம்மத்.

**101.** ஏழாம் மாதத்திலே எங்கள் நபீ
இஸ்மாயீல் தோன்றிச் சென்றார் முஹம்மத்.

**102.** றப்புல் ஆலமீனின் ஹபீபைச்
சுமந்துள்ளீர் என்று சொன்னார் முஹம்மத்.

**103.** ஏழாம் மாதத்திலே கிஸ்றா மன்னன்
கோட்டைகள் இடிந்தனவாம் முஹம்மத்.

**104.** எட்டாம் மாதத்திலே மூஸா நபீ
தோன்றியே சுபமும் சொன்னார் முஹம்மத்.

**105.** நபீமாரின் முத்திரையைச் சுமக்கிறீர்
பாக்கியம் பெற்றீரென்றார் முஹம்மத்.

**106.** எட்டாம் மாதத்திலே பாரசீகர்
நெருப்பு அணைந்ததுவாம் முஹம்மத்.

**107.** ஒன்பதாம் மாதத்திலே ஈஸா நபீ
சோபனம் சொல்லிச் சென்றார் முஹம்மத்.

**108.** ஒன்பதாம் மாதத்திலே கிஸ்றாவின்
கிரீடம் விழுந்ததுவாம் முஹம்மத்.

**109**. களிப்புடன் பெற்றார்கள் ஆமினா
கண்ணிய மாநபியை முஹம்மத்.

**110**. 'அல்லாஹு அக்பர்' என்றே தக்பீர்
முழக்கத்தில் பிறந்தவராம் முஹம்மத்.

**111**. வயிற்றில் இருக்கும் போதே கத்னா
செய்தோராய் மலர்ந்தவராம் முஹம்மத்.

**112**. பிறக்கும் போதே கத்னா செய்தவர்
பன்னிரு பேருகளாம் முஹம்மத்.

**113**. ஆதம் ஷீது நூஹு இத்ரீஸ்
நன்நபீ லூத் யூசுபாம் முஹம்மத்.

**114**. மூஸா ஷுஐப் சுலைமான் யஹ்யா
ஈஸா தங்கள் முதலாம் முஹம்மத்.

**115**. எண்ணையும் பூசப்பட்டு நஜீஸின்றி
சுத்தமாய் பிறந்தவராம் முஹம்மத்.

**116**. எங்களில் எத்தனைபேர் இப்படிப்
பிறந்ததிற் சான்று உண்டோ? முஹம்மத்.

**117**. பிறக்கும் போதே சுறுமா இடப்பட்டு
பிறந்தவர் எம் நபியாம் முஹம்மத்.

**118**. வெட்டப்பட்டுப் பிறந்தார் தொப்புள் கொடி
வெண்மதி முத்தொளியாய் முஹம்மத்.

**119**. பூமியில் கையை வைத்து சுஜூதில்
விழுந்தோராய்ப் பிறந்தவராம் முஹம்மத்.





**120**. நன்றியே செய்யாதப் பாவியிவன்
எப்படி ஒன்றிடுவான் முஹம்மத்.

**121**. தாங்கள் பிறக்கும் போதே ஒளியுடன்
ஒளிவீசிப் பிறந்தவராம் முஹம்மத்.

**122**. அவ்வொளி கொண்டே ஷாம் தேசத்தின்
கோட்டைகள் தெரிந்தனவாம் முஹம்மத்.

**123**. வற்றாமல் ஓடிக் கொண்ட சாவா நதி
வற்றியே விட்டதுவாம் முஹம்மத்.

**124**. தண்ணீர் வற்றிக் கிடந்த சமாவா
ஓடை நிறைந்ததுவாம் முஹம்மத்.

**125**. வரலாற்று ஏடுகளில் இல்லை இல்லை
இதுபோன்ற வரலாறு முஹம்மத்.

**126**. அன்னை ஹலீமாவின் மார்பொன்று
பாலின்றி இருந்ததுவாம் முஹம்மத்.

**127**. தாங்கள் சுவைக்கையிலே மார்பிலே
பால் சுரந்து வழிந்ததுவாம் முஹம்மத்.

**128**. பாலின்றி மெலிந்திருந்த ஆடுகூட
பால் கொடுத்து உதவியதாம் முஹம்மத்.

**129**. நடக்க முடியாமல் கிடந்த
கழுதை நடந்ததுவாம் முஹம்மத்.

**130**. தாங்கள் அதன்மேலே ஏறியதால்
இதுவெல்லாம் நடந்ததுவாம் முஹம்மத்.

**131**. முடமாகக் கிடக்கின்ற இப்பாவியை
நடைபோட வைத்திடுவீர் முஹம்மத்.

**132**. கல்மரம் மிருகங்களும் தங்களுக்கு
சலாம் சொல்லி வீழ்ந்தனவாம் முஹம்மத்.

**133**. வானத்து மேகங்களும் தங்களுக்கு
குடைபிடித்து நின்றதுவாம் முஹம்மத்.

**134**. இப்படி வரலாறு எங்குமில்லை
யாருக்கும் நடந்ததில்லை முஹம்மத்.

**135**. யாருக்கும் கொடுக்காத வேதமொன்று
உமக்கிறை கொடுத்தவனாம் முஹம்மத்.

**136**. நபிமார்கள் யாவரிலும் தங்களை
சிறப்பாக ஆக்கிக் கொண்டான் முஹம்மத்.

**137**. இப்றாஹீம் நன்நபிக்கு நெருப்பிலே
இறைகாட்சி கிட்டியதாம் முஹம்மத்.

**138**. யூனுஸ் நபியவர்க்கு இறைவன்
மீனில் கொடுத்தவனாம் முஹம்மத்.

**139**. தூர்சீனா மலையடியில் மூஸாவுக்கு
இறைகாட்சி கொடுத்தவனாம் முஹம்மத்.

**140**. ஏழு வானங்களும் கடந்து
மிஃறாஜு சென்றவராம் முஹம்மத்.

**141**. ஹிஜ்ரிக்கு முன்னாலே எங்கள் நபீ
கீர்த்தியாய்ச் சென்றவராம் முஹம்மத்.





**142**. யாருமே கண்டிடாத அற்புதங்கள்
கண்டவர் எம் நபியாம் முஹம்மத்.

**143**. இறைவனை வானத்திலே சந்திக்க
பலநூறு காரணமாம் முஹம்மத்.

**144**. காரணம் சொல்வதற்கு பாமாலை
போதாது நிச்சயமாய் முஹம்மத்.

**145**. ஜிப்ரீலும் கொண்டு வந்தார் நம் நபிக்கு
உவப்பான வாகனத்தை முஹம்மத்.

**146**. மின்னலின் வேகத்திலே செல்லுமந்த
புறாக் கெனும் வாகனமாம் முஹம்மத்.

**147**. எங்கள் நபியவர்க்கு செல்கையில்
தோன்றிட்டாம் முன் வானம் முஹம்மத்.

**148**. வல்லோன் கிருபையுண்டு உமக்கென்று
ஆதம் நபியுரைத்தார் முஹம்மத்.

**149**. யஹ்யாவும் ஈஸாவும் இரண்டாம்
வானத்தில் இருந்தனராம் முஹம்மத்.

**150**. இரண்டாவது வானம் இரும்பினால்
இறைவன் அமைத்தவனாம் முஹம்மத்.

**151**. மூன்றாவது வானம் செல்கையில்
நல்யூசுபைக் கண்டார்கள் முஹம்மத்.

**152**. மூன்றாவது வானம் வெள்ளியினால்
ஆனதைக் கண்டவராம் முஹம்மத்.

**153**. நான்காவது வானம் எங்கள் நபீ
இத்ரீசைக் கண்டார்கள் முஹம்மத்.

**154**. இத்ரீஸ் நபீ வாழும் வானமது
தங்கத்தில் ஆனதுவாம் முஹம்மத்.

**155**. எங்கள் நபியவர்கள் ஐந்ததில்
ஹாரூன் நபியைக் கண்டார் முஹம்மத்.

**156**. இறைவனின் வல்லமையில் ஐந்தாம் வானம்
மாணிக்கம் மரகதமாம் முஹம்மத்.

**157**. ஆறாவதில் மூஸா வானமது
முத்தினால் ஆனதுவாம் முஹம்மத்.

**158**. ஏழாவது ஒளியாம் வானமதில்
இப்றாஹீம் நன்நபியாம் முஹம்மத்.

**159**. எல்லா நபிமாரும் எம் நபிக்கு
பண்புடன் சலாமுரைத்தார் முஹம்மத்.

**160**. பலகோடி அற்புதங்கள் கண்டவராம்
எங்கள் நபீ பெருமான் முஹம்மத்.

**161**. பலகோடி திரைகளினைக் கடந்து
இறைவனைக் கண்டவராம் முஹம்மத்.

**162**. இறைவனைக் கண்டார்கள் எங்கள் நபீ
கண்ணாலும் கல்பாலும் முஹம்மத்.

**163**. இறையோனின் அர்ஷதிலே எங்கள் நபீ
கால்தடம் பதித்தவராம் முஹம்மத்.





**164**. எங்கள் நபிகளுக்கு இறைவன்
தொழுகையைப் பரிசளித்தான் முஹம்மத்

**165**. இறைவன் நபிக்களித்த தொழுகைகள்
ஐம்பது வக்துகளாம் முஹம்மத்

**166**. கருணை நபியவர்க்கு இறைவன்
ஐந்தாகக் குறைத்தவனாம் முஹம்மத்

**167**. இப்படிச் செய்ததெல்லாம் இறைவனின்
மாபெரும் தத்துவமாம் முஹம்மத்

**168**. மிஃறாஜின் படிப்பினையில் எங்களுக்கு
பலநூறு விருந்துகளாம் முஹம்மத்

**169**. திங்கள் நபியவர்கள் சிறப்பினில்
சொல் லில்லா பொக்கிஷமாம் முஹம்மத்

**170**. சுட்டு விரலசைவில் சந்திரனை
இரண்டாகப் பிளந்தவராம் முஹம்மத்

**171**. நைனாரின் தடவுதலில் நபித் தோழர்
நரைக்காமல் வாழ்ந்தவராம் முஹம்மத்

**172**. எங்கள் நபியவர்கள் கைகளுக்கு
எண்ணில்லா அற்புதமாம் முஹம்மத்

**173**. மன்னர் நபியவர்கள் உமிழ்ந்ததால்
கண்பார்வை மிளிர்ந்ததுவாம் முஹம்மத்

**174**. முன்னாலே காண்பதுபோல் எங்கள் நபீ
பின்னாலும் காண்பவராம் முஹம்மத்

175. மக்கத்து மாநபியின் திருமுகம்
மறையாத சந்திரனாம் முஹம்மத்.

176. சந்திரன் தோன்றியதா? என்று தோழர்
நினைத்திட வாழ்ந்தவராம் முஹம்மத்.

177. திங்கள் நபியரசர் பற்களெல்லாம்
சொர்க்கத்து ரத்தினமாம் முஹம்மத்.

178. பிறைபோன்று இலங்கிடுமாம் எங்கள் நபீ
நெற்றியின் பேரழகு முஹம்மத்.

179. கல் சின்னம் தாங்கிடுமே எங்கள் நபீ
கால்தடம் பட்டவுடன் முஹம்மத்.

180. மண்ணில் நடக்கையிலே கால்தடம்
கண்டிடார் எப்பொழுதும் முஹம்மத்.

181. எங்களைப் போன்றில்லை மார்க்கத்தின்
சட்டங்கள் மாநபிக்கு முஹம்மத்.

182. சமமான காலத்திலே எங்களுக்கு
நான்கு மனைவிகளே முஹம்மத்.

183. திருமணம் செய்வதற்கு ஆகுமதாம்
இறைசொன்ன கட்டளையாம் முஹம்மத்.

184. ஆனாலும் மாநபிக்கு இதுபோன்ற
சட்டங்கள் விதிவிலக்காம் முஹம்மத்.

185. திங்கள் நபியவர்கள் எங்களைத்
தொழுகையில் அழைத்திட்டால் முஹம்மத்.





186. தொழுகையை விட்டுவிட்டு பதிலும்
சொல்வது கட்டளையாம் முஹம்மத்.

187. வேறுயார் அழைத்தாலும் தொழுகையை
விடுவது தண்டனையாம் முஹம்மத்.

188. தொழுகையில் மாநபியை அழைப்பது
அனைவரின் கடமையதாம் முஹம்மத்.

189. அருளுக்குப் பெயரான அண்ணல் பாங்கு
சொன்னதாய்ச் சான்றே இல்லை முஹம்மத்.

190. தூங்கிய மாநபிகள் வுழூவினை
எடுக்காமல் தொழுததுண்டாம் முஹம்மத்.

191. கண்கள் உறங்கிடினும் உள்ளம்
உறங்காத மாநபியாம் முஹம்மத்.

192. அண்ணல் நபியவர்கள் வாழ்நாளில்
கொட்டாவி விட்டதில்லை முஹம்மத்.

193. எங்கள் உடல்களிலே ஈக்கள்
மொய்ப்பது சாத்தியமாம் முஹம்மத்.

194. கஸ்தூரி மணங்கமழும் மன்னர் உடல்
சாத்தியம் அற்றதுவாம் முஹம்மத்.

195. காத்திமுல் அன்பியாவின் நிழல் தரை
தொட்டதிற் சான்றேயில்லை முஹம்மத்.

196. அண்ணல் பெருமானின் வியர்வை
கஸ்தூரி விளை நிலமாம் முஹம்மத்.

**197.** தூக்கத்தில் ஸ்கலிதம் நபிக்கில்லை
தூய்மையில் வெண் நிலவாம் முஹம்மத்.

**198.** கூட்டத்தில் எத்தனைபேர் நின்றிடினும்
உயர்ந்தோராய்த் திகழ்பவராம் முஹம்மத்.

**199.** செல்லும் இடம் நினைத்தால் செல்பவராம்
செம்மல் நபியவராம் முஹம்மத்.

**200.** திங்கள் நபிகழித்த மலம்சலம்
பூமியே விழுங்கிடுமாம் முஹம்மத்.

**201.** கண்மணி நாயகத்தின் கழிவுகள்
அறுவறுப் பற்றவையாம் முஹம்மத்.

**202.** சுந்தர் நபியவர்கள் இரத்தம்
சுத்தத்தில் சுந்தரமாம் முஹம்மத்.

**203.** அன்னிய மாந்தர்களைப் பார்ப்பது
ஆகுமாம் அண்ணலுக்கு முஹம்மத்.

**204.** நன்மைகள் அழிந்திடுமாம் அண்ணலிடம்
சப்தத்தை உயர்த்துவதால் முஹம்மத்.

**205.** தாங்கள் விடும்கடைசி மூச்சிலும்
உம்மத்தை நினைத்தவராம் முஹம்மத்.

**206.** மெய்யுகம் அடைந்த பின்னும் உயிருடன்
வாழ்கின்ற உத்தமராம் முஹம்மத்.

**207.** மன்னர் நபீமணத்த மனைவியர்
மண்ணோர்க்கு மாதவராம் முஹம்மத்.





**208.** மனம் தூங்கா மாநபியின் மனைவியை
மணப்பது இறை தடையாம் முஹம்மத்.

**209.** பாவத்தில் சேர்த்துவிடும் இத்தா
முஃமீன்கள் தாயோருக்காம் முஹம்மத்.

**210.** காரணம் மாநபிகள் இறந்தபின்
உயிருடன் வாழ்பவராம் முஹம்மத்.

**211.** கப்றினில் வைத்த பின்னும் நபிகள்
இறையோனைத் துதிப்பவராம் முஹம்மத்.

**212.** மறுமையில் எல்லோரும் மாநபிக்குப்
பின்னாலே எழுபவராம் முஹம்மத்.

**213.** எந்த நபிமாரும் பெற்றிடாத
சிரம்சாய்தல் செய்பவராம் முஹம்மத்.

**214.** எல்லோரும் காணுமுன்னே எங்கள் நபீ
முன்னோனைக் காண்பவராம் முஹம்மத்.

**215.** யாருக்கும் கொடுக்காத கொடியினைத்
தன்வசம் கொண்டவராம் முஹம்மத்.

**216.** நல்லோர்கள் வல்லோர்கள் அனைவரும்
கொடிநிழல் பெற்றிடுவார் முஹம்மத்.

**217.** நிழலில்லா நாளையிலே எங்களுக்கும்
இறையருள் செய்திடுவான் முஹம்மத்.

**218.** அச்சங்கள் தீர்ந்தவராம் எங்கள் நபீ
இறையோனின் சந்நிதியில் முஹம்மத்.

219. அலைமோதித் திரியுமந்த வேளையில்
பரிந்துரை செய்திடுவார் முஹம்மத்.

220. எங்களின் மாநபியை வரவேற்க
சொர்க்கங்கள் காத்திருக்கும் முஹம்மத்.

221. முதலோனின் ஒளியான மன்னர்நபீ
மகிழ்வுடன் நுழைந்திடுவார் முஹம்மத்.

222. சொர்க்கத்தின் பாலகரும் சொக்கி நிற்பர்
செம்மலின் பேரழகில் முஹம்மத்.

223. ஸூறதுத் தாஹாவை ஓதிடுவார்
மன்னர்க்கு மன்னவராம் முஹம்மத்.

224. மயங்கியே கிடந்திடுவோம் மன்னரின்
குரல் தந்த இனிமையிலே முஹம்மத்.

225. எங்களைப் போன்றில்லை திங்கள் நபீ
தெரிந்திடுவாய் மகனே முஹம்மத்.

226. என்னால் முடிந்தவற்றைச் சொல்லிவிட்டேன்
மாநபீ பெருமைகளை முஹம்மத்.

227. சொல்லாமல் மறந்துவிட்ட பெருமையை
இறைவா நீ நன்கறிவாய் முஹம்மத்.

228. பெருமையைச் சொல்வதற்கு உன்னையன்றி
யாருள்ளார் இவ்வுலகில் முஹம்மத்.

229. இறைவா! என் பாவங்களை மன்னித்து
எனக்கருள் செய்திடுவாய் முஹம்மத்.





230. என்னை ஈன்றெடுத்த பெற்றோர்கள்
குடும்பத்தோர் யாவருக்கும் முஹம்மத்.

231. இறைஞானம் சொல்லித்தரும் குருவுக்கும்
ஆசான்கள் யாவருக்கும் முஹம்மத்.

232. உந்தன் ஹபீபான மாநபீயை
கவி கொண்டு புகழ்வோர்க்கும் முஹம்மத்.

233. நல்லோர்கள் வல்லவர்கள் யாவருக்கும்
மன்னித்து அருள் சொரிவாய் முஹம்மத்.

234. பிணியுற்று வாழ்வோர்கள் யாவருக்கும்
சுகவாழ்வு அளித்திடுவாய் முஹம்மத்.

235. தீனுக்காய் செலவு செய்யும் செல்வந்தர்
யாவர்க்கும் அருள் சொரிவாய் முஹம்மத்.

236. நல்லுள்ளம் கொண்டோர்கள் யாவர்க்கும்
செல்வத்தைப் பெருக்கிடுவாய் முஹம்மத்.

237. செல்வத்தில் சிறப்பான குழந்தைச்
செல்வத்தைத் தந்திடுவாய் முஹம்மத்.

238. ஈருலகப் பலன்கள் அனைத்தையும்
யாவர்க்கும் தந்திடுவாய் முஹம்மத்.

239. கண்மணி நாயகத்தைக் கனவிலும்
நினைவிலும் காட்டிடுவாய் முஹம்மத்.

240. கருணையின் வாசலிலே எங்களைக்
கொண்டு போய் சேர்த்திடுவாய் முஹம்மத்.

**241.** மன்னரின் மாளிகையில் எங்களை
நுழைந்திடச் செய்திடுவாய் முஹம்மத்.

**242.** சொர்க்கத்துப் பூங்காவில் எங்களைத்
தொழுதிடச் செய்திடுவாய் முஹம்மத்.

**243.** மதீனத்து மாநபியின் பொருட்டால்
கஃபாவைக் காணச் செய்வாய் முஹம்மத்.

**244.** மன்னர்நபீ கரத்தால் ஹவ்ழுல் கவ்தர்
நீரினைத் தந்திடுவாய் முஹம்மத்.

**245.** காவியக் காதலரின் கொடியின் கீழ்
நிழல்காண வைத்திடுவாய் முஹம்மத்.

**246.** உந்தன் கொடை மழையில் எங்களை
என்றும் நுழைத்திடுவாய் முஹம்மத்.

**247.** உள்ளத்தில் ஆடிச் செல்லும் தேட்டங்கள்
யாவையும் தீர்த்திடுவாய் முஹம்மத்.

**248.** கவிதந்த மாநபியின் பொருட்டால்
காவியம் ஏற்றிடுவாய் முஹம்மத்.

**249.** மதிகெட்ட பாவியிவன் குறைகளை
என்றென்றும் மறைத்திடுவாய் முஹம்மத்.

**250.** பாமாலை முத்திரையே இதுவொரு
முடிவில்லை சத்தியமே முஹம்மத்.

**அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மத்**
**யாறப்பி ஸல்லி அலைஹி வஸல்லிம்!!**





**கவி :**

**ஸலாதுல்லாஹ் ஸலாமுல்லாஹ்**
**அலல் பாஸீ றஸூலில்லாஹ்**
**ஸலாதுல்லாஹ் ஸலாமுல்லாஹ்**
**அலல் மாஹீ ஹபீபில்லாஹ்**

**01.** எங்கும் அவனே! என்றும் அவனே!
என்னை ஆளும் என் வல்லவனே!
என் கவிநயமே! என் கருப் பொருளே!
எந்தன் மனம் இறைகுணம் கொண்டிடுவாய்!

**02.** படைப்பாய் அவனும் தெரிபவனே!
படைத்தோனாக இருப்பவனே!
படைப்புக்குப் படைத்தவன் வேறில்லையே!
படைத்தவன் குணமும் கொண்டிடுவாய்!

**03.** தூணிலும் துரும்பிலும் என்கின்றவன்
தூயோனை அறியாப் பாவியவன்!
தூணாய் துரும்பாய் இருக்கின்றவன்!
தூயோன் குணமும் கொண்டிடுவாய்!

**04.** அவ்வலும் ஆகிரும் ஆனவனே!
அல்லும் பகலும் இருப்பவனே!
அன்புக்கு உறைவிடம் தானவனே!
அனுதினம் இறைகுணம் கொண்டிடுவாய்!

**05.** அறிவுக்கு அமுதம் தந்தவனே!
அரசனும் ஆண்டியும் ஒத்தவனே!
அவனுக்கு இணை துணை அற்றவனே!
அறிந்திதை இறைகுணம் கொண்டிடுவாய்!

**06**. மறைபொருளாக இருந்தவனே!
மறை நபியாக வந்தவனே!
மனிதனுக் கவனும் வேறில்லையே!
மறைவில்லா இறைகுணம் கொண்டிடுவாய்!

**07**. "குன்" எனும் சொல்லைச் சொன்னவனே!
குறையில்லா நபியொளி யானவனே!
குணத்திலும் நிறைநபீ தானவரே!
குணத்தினில் இறைகுணம் கொண்டிடுவாய்!

**08**. பலகோடி வருடங்கள் அழைத்தவனே!
பார்வையில் மறையா மதியவரே!
பார்ப்பவை யெல்லாம் ஆனவனே!
பார்வையில் இறைகுணம் கொண்டிடுவாய்!

**09**. மூலப் பொருளாய் வந்தவனே!
மூலத்தில் கோலம் படைத்தவனே!
மூலமும் கோலமும் அற்றவனே!
மூலத்தில் இறைகுணம் கொண்டிடுவாய்!

**10**. இரண்டாய் தெரிவது இங்கில்லையே!
இரண்டுக்கு இங்கே இடமில்லையே!
இறைவனை யன்றி வேறில்லையே!
இறைவனில் நிறைகுணம் கொண்டிடுவாய்!

**11**. காணும் கோலம் யாவையுமே!
கர்த்தனின் கோலம் தானதுவே!
கருதிடுவாய் இதை என் மனமே!
கருத்தினில் இறைகுணம் கொண்டிடுவாய்!





**12**. இறைவனுக்கில்லை ஈடு இணை!
இருமையில் அறுத்திடுவாயே தினை!
இரண்டென் றுணர்ந்திடின் காண்பாய் வினை!
இயற்கையில் இறைகுணம் கொண்டிடுவாய்!

**13**. அவனைப் போன்றிங்கு ஒன்றுமில்லை!
அவனுக்கு வேறாய் எதுவுமில்லை!
அவன் குறை என்றும் காண்பதில்லை!
அன்பினில் இறைகுணம் கொண்டிடுவாய்!

**14**. படைப்பினைப் படைக்குமுன் தோற்றமில்லை!
படைத்தோனாய் ஆனபின் எல்லையில்லை!
படைத்தோனைத் தவிரமெய்க் கோலமில்லை!
படைப்பினில் இறைகுணம் கொண்டிடுவாய்!

**15**. பானைக்கு மண்ணும் வேறில்லை!
பானையாய்த் தெரிவது மூலமில்லை!
பார்த்தால் பானைதான் உண்மையில்லை!
பாரினில் இறைகுணம் கொண்டிடுவாய்!

**16**. கடலலை கடலுக்கு வேறில்லை!
கடலலை என்றொரு பொருளில்லை!
கண்டதால் கடலலை உண்மையில்லை!
கருத்தினில் இறைகுணம் கொண்டிடுவாய்!

**17**. உன்கண்ணுக் கவைகள் தெரிவதனால்
உண்மையில் உண்டென்று நம்புகிறாய்!
உலகினில் குருடனாய் வாழுகிறாய்!
உணர்ந்திதை இறைகுணம் கொண்டிடுவாய்!

**18.** எல்லாம் அவனாய் இருக்கையிலே
எங்கோ அவனைத் தேடுகிறாய்!
எங்கும் அவனென்று நம்பிடுவாய்!
என்றும் இறைகுணம் கொண்டிடுவாய்!

**19.** தெளிவாய் விளக்கங்கள் இருக்கையிலே
தெளிவின்றி உலகினில் வாழுகிறாய்!
தெளிவுற்றோர் வாழ்க்கையில் நடந்திடுவாய்!
தெளிவினில் இறைகுணம் கொண்டிடுவாய்!

**20.** குருவிடம் ஞானத்தைக் கற்றிடுவாய்!
குருவென்றால் யாரென்று உணர்ந்திடுவாய்!
குருவினில் இறைவனைக் கண்டிடுவாய்!
குருவில் இறைகுணம் கொண்டிடுவாய்!

**21.** ஞானிகள் வாழ்வினைப் படித்திடுவாய்!
ஞானிகள் சொல்வதைக் கேட்டிடுவாய்!
ஞானத்தில் இறைவனைப் பெற்றிடுவாய்!
ஞானியாய் இறைகுணம் கொண்டிடுவாய்!

**22.** முடிவினில் இறைவனைக் கண்டிடுவாய்!
முச்சுடர் முஹம்மதை அறிந்திடுவாய்!
முக்தி நிலைபெற்று உயர்ந்திடுவாய்!
முதலோன் இறைகுணம் கொண்டிடுவாய்!

**23.** உன்னதமான ஞானத்தினை
உணர்வதினாலே பெற்றிடுவாய்!
உள்ளமைக் கோலம் கண்டிடுவாய்!
உலகினில் இறைகுணம் கொண்டிடுவாய்!





**24.** கர்த்தனைப் பற்றிய அறிவுகளை
கவிதையில் சொல்லிட முடியாது!
குருவின்றி எவருக்கும் கிடைக்காது!
குணத்தினில் இறைகுணம் கொண்டிடுவாய்!

**25.** சொல்வது மாத்திரம் எந்தன் வழி!
செயலினில் எடுப்பது உந்தன் வழி!
செல்பவர்க் கென்றும் இறைவன் வழி!
சொல்லினில் இறைகுணம் கொண்டிடுவாய்!

**ஸல்லல்லாஹு அலா முஹம்மத்**
**யாறப்பி ஸல்லி அலைஹி வஸல்லிம்**